16th November 1957]

SRI D. S. AUTHIMOOLAM: மத்திய சர்க்காருக்கு பல வரிகள் மூலமாக பணம் கொடுக்கப்படுகிறது. புகையிலை வரியிலிருந்து ரூபாய்க்கு 1½ அணா மத்திய சர்க்கார் தருகிறார்கள். இந்த மாதிரி அனுசரிக்கப்படும் கொள்கை நியாயமானதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அரசியல் கமிட்டியின் தீர்ப்பின் பிரகாரம் மத்திய சர்க்கார் மாகாண சர்க்காருக்கு பகிர்ந்து கொடுத்து வருகிறது. இப்பொழுது நிதி கமிஷன் ஒரு திட்டத்தை சிபார்சு செய்திருக்கிறது. இனி அதன்படி ராஜ்ய சர்க்கார்களுக்கு நிதியை பகிர்ந்து கொடுப்பார்கள்.

SRI A. A. RASHEED : What is the opinion of the Government regarding the decisions of the Finance Commission?

MR. SPEAKER : It does not arise out of the main question. The hon. Member may put a separate question.

Primary Health Centres.

* 223 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of Primary Health Centres and Maternity and Child Welfare Centres to be started in the Coimbatore district during 1957–58 ; and

(*b*) the places where they will be started?

THE HON. SRI M. A. MANICKAVELU :

(*a*) Primary Health Centres—Four.

Maternity and Child Welfare Centres—Twelve.

(*b*) The location of the Primary Health Centres has not yet been settled. Maternity and Child Welfare Centres are located at the following places :—

1. Kalampalayam.
2. Ammapatti.
3. Kalapatti.
4. Kullampalayam.
5. Chinniyampalayam.
6. Kurumandur.
7. Koilpalayam.
8. Puliampatti.
9. Periapatti.
10. Perianaickenpalayam.
11. Singanallur.
12. Palayakottai.

SRI P. G. MANICKAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹெல்த் சென்டர்களையும், ஆஸ்பத்திரிகளையும் கிராமங்களில் தாராளமான இடங்களில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[16th November 1957

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் சொல்லுவதைக் குறிப்பாக கவனித்து அம்மாதிரியான இடங்களில், கிராமப்புறங்களில், ஆரம்பிக்கப்படும்.

Pavement dwellers.

* 224 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) with reference to the answer to clause (*c*) of question No. 78 given on 8th July 1957, whether the Government of India have approved the scheme of the Corporation of Madras for housing the platform dwellers in the City of Madras; and

(*b*) if so, the amount provided for the purpose by the Centre?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Rs. 75,750.

SRI N. K. PALANISAMI : பிளாட்பாரத்தில் வசிக்கக்கூடிய மக்களுக்கு கட்டிக் கொடுக்கும் வீடுகள் எல்லாவற்றையும் ஹார்பர் பகுதியில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஹார்பர் பக்கத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. தண்டையார்பேட்டையில் பக்கத்தில் அவர்களுக்கு இடம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Whereas the platform-dwellers live on the platforms on account of bare necessity . . .

MR. SPEAKER : Let the hon. Member please put it in the form of a question. Let it not be too long.

SRI K. VINAYAKAM : It is a parenthetical clause and I am coming to the main clause.

MR. SPEAKER : Let it be in the form of a direct question.

SRI K. VINAYAKAM : Do the Government think that any useful or utilitarian purpose will be served by shifting these people to a distant place, like Tondiarpet however much they may try to provide sanitary facilities, etc., or they will be willing to go there?

MR. SPEAKER : The hon. Member has faithfully followed Winston Churchill. (Laughter).

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member may perhaps realize that it is an impossible task to provide accommodation very near the places of employment of every person. It is, however, necessary to provide sanitary facilities and it is therefore proposed to take them to Tondiarpet where sanitary facilities may be given.

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, இத்தகைய பிளாட்பாரங்களில் வாழ்கின்ற மக்களுக்கு குடியிருப்பு ஏற்பாடு செய்ய மிகக் குறைவான நிதியே ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அதிகமான நிதி ஒதுக்குவதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது சொன்ன திட்டத்தில் 102 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக இருக்கிறார்கள். இன்னும் 1,001 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்காக 13 லட்ச ரூபாய் செலவு செய்ய ஒரு திட்டம் இருக்கிறது. இந்த வீடுகள் கொருக்குப்பேட்டையில் கட்டிக் கொடுக்கப்படும்.